# கமலநாதம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின்
முதலாவது பீடாதிபதி




கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்

## பாராட்டு விழா மலர்

## KAMALANATHAM

20.05.2001

# கமலநாதம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்
கல்லூரிப் பீடாதிபதி

***கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்***

## பாராட்டு விழா மலர்

பாராட்டுவோர்
நாயன்மார்கட்டு மக்கள்,
கோப்பாய் வாழ் அன்பர்கள்,
யாழ்/தேசிய கல்வியியற்
கல்லூரிச் சமூகத்தினர்.

20.05.2001



## கலாநிதி தி. கமலநாதன் பாராட்டுவிழாச் சபை

தலைவர்
திரு. லயன் வை. தியாகராசா

செயலர்
திரு. இராசையா குகதாசன்

பொருளர்
திரு. இராசரத்தினம்

உறுப்பினர்கள்

திரு. க. சொக்கலிங்கம்
(சொக்கன்)

திரு. வை. பாலசுப்பிரமணியம்
(இளைப்பாறிய நீதிமன்ற அலுவலர்)

உ
சிவமயம்
குருபாதம்

# கல்விப் பணியாற்றும் கனவான்

சைவமும், தமிழும் தழைத்தோங்கிமிளிரும் பதி நாயன்மார்கட்டு. இதனால் சிறந்த சைவசமயச் சூழலில் வளர்ந்து வந்த, இன்றைய தேசியக் கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி திரு. திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களைப் பாராட்டி அவர் பிறந்த மண்ணின் மக்கள் விழா எடுப்பதனை யிட்டு மனமகிழ்ச்சியடைகின்றோம். கல்வியின் வளர்ச்சிப் பாதையில் சாதாரண கலைப் பட்டதாரியாகப் பல்கலைக் கழகத் திலிருந்து வெளியேறி, உதவியாசிரியாகிப்பின் ஆசிரிய வாண்மையை விருத்தி செய்யும் விரிவுரையாளராகி, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி யின் பீடாதிபதி யாக என்று திரு. கமலநாதனின் பணி நீண்டதொரு பின்னணியைக் கொண்டுள்ளது.

அந்தப் பாதையில் கலைமாணி, முதுமாணியாகி இப்போது "கலாநிதி" யாகியுள்ளது பாராட்டுக்குரியது. எதையும் திட்டமிட்டுச்செயற் படும் தன்மை கொண்டவரான கலாநிதி கமலநாதன் எல்லோருடனும் அன்பாகப் பழகும் தன்மை கொண்டவர். பல சமய சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் காலத்துக்கேற்றவாறு இவற்றை ஆற்றுப் படுத்தி வருபவர். இந்த வகையில் இங்கு பீடாதிபதியாக இருந்து கல்விச் சமூகத்திற்கும் எதிர்காலச் சிற்பிகளான இளைஞர்கட்கும் நற் பணிகளை ஆற்றிவருவது யாவரும் அறிந்ததே.

இவர் இன்னும் பல பணிகளில் தன்னை ஈடுபடுத்திப் பல்லாண்டு காலம் வாழ்ந்து சமூகத்திற்குத் தொண்டாற்ற இறைவனை வேண்டு கின்றோம். விழா எடுக்கும் விழாக்குழுவினருக்கும் எமது பாராட்டுக்கள்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள்,
குருமகா சந்நிதானம்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
நல்லூர்.

## அர்ப்பணிப்புணர்வும் ஆளுமையும் மிக்கவர்

கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருவதனைக் கண்டு பூரிப்படைகின்றேன். பொதுக் கலைப் பட்டதாரியாகப் பல்கலைக் கழகத்தினின்றும் வெளியேறியவர் இன்று "கலாநிதி" யாக வளர்ந்திருக்கின்றார்! சாதாரண உதவி ஆசிரியனாக வாழ்வை ஆரம்பித்து இன்று தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதியாக உயர்ந்துள்ளார்!

இத்தகைய வளர்ச்சிக்குக் கடின உழைப்பு மட்டும் போதாது பொறுமை, மனவுறுதி, ஆளுமை, மற்றவர்களை வசீகரிக்கும் மனோபாவம் என்பன அவசியம்.

"ஆளும் திறமையும் வீரமும் கடமையும் அறிவும் கொண்டவர் ஆண்கள்" என்றார் பட்டுக்கோட்டையார். திரு. கமலநாதனிடம் சிறந்த தலைவனுக்குரிய சகல பண்புகளையும் காண்கின்றேன். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்து புதிய தொரு வருடத்தில் காலடி எடுத்து வைக்கின்றது. கடந்த ஒரு வருடத்தில் அது பெற்ற வளர்ச்சிக்கு திரு. கமலநாதனின் ஆளுமையும், அவருடைய ஆசிரிய குழாத்தின் அர்ப்பணிப்புமே முக்கிய காரணங்களாகும். திரு. பா. தனபாலன் அவருக்கு ஒரு சிறந்த துணைத் தளபதியாக வாய்த்துள்ளார்.

ஒருவருடம் நிறைந்த கல்லூரிக்கு மரபுகள் [TRADITIONS] இனித் தான் ஏற்படப் போகின்றன! திரு. கமலநாதன் இந்த நிறுவனத்துக்கு உயர்ந்த மரபுகளை உருவாக்கி வருகின்றார் என்பது வெள்ளிடைமலை.

"சொல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
*இகல்வெலல் யார்க்கும் அரிது*"

அன்புடன்
எஸ். ஜெபநேசன்

*பேராயர் தென்னிந்திய திருச்சபை,*
*வட்டுக்கோட்டை.*

## தேவியின் அருளால் சிறப்போடு வாழ்க!

அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம் என்ற கூற்றை இறுகப்பற்றி அன்னையின் கல்விச் செல்வத்தையும் அருளையும் பெற்றவர் யாழ் தேசிய கல்விக் கல்லூரியின் முதலாவது பீடாதிபதியாகிய திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள்.

கமலநாதன் இள வயதில் கல்வியை கற்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர் என்று எமது தந்தையார் அடிக்கடி கூறுவார். இவரின் தந்தையாரும் எமது தந்தையாரும் மிக்க நெருங்கிய நண்பர்கள். அந்தவகையில் கமலநாதனும் அவர் தந்தையாரும் எம்முடன் நன்கு நெருங்கிப் பழகுபவர். எமது குடும்ப நண்பரும் கூட. இளமையில் கல்வி கற்பதில் எவ்வளவு ஆர்வமாக இருந்தாரோஅதை விட பின்பு கல்வியை கற்பித்தலிலும் மிக்க ஆர்வம் கொண்டு இலங்கையின்பல பாகங்களிலும் கல்வி கற்பித்து விரிவுரையாளராகி இன்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதல் பீடாதிபதி யாக நியமனம் பெற்று ஓராண்டு பூர்த்தியாகின்றது. இந்த நல்ல வேளையில் திரு. தி. கமலநாதன் கல்வியியற் "கலாநிதி" பட்டத்தை மேலும் பெற்றுள்ளார்.

இதை அறிந்து நாம் மட்டுமல்ல நமது நாயன்மார்கட்டுக் கிராமமே தலை நிமிர்ந்து நிற்கின்றது. எமது கிராம மக்கள் வாழ்த்துகிறார்கள். நல்லாசிரியர், விரிவுரையாளர் என்று அவர்தம் மாணாக்கர்கள் இன்று எமது ஆசிரியர் பீடாதிபதியாக இருப்பதையிட்டு மனம் நெகிழ்ந்து வாழ்த்து கின்றார்கள். வணங்குகின்றார்கள். இவ்வாறு சிறப்புடன் விளங்கும் ஓர் நல்லாசானுக்கு விழா எடுக்கும் இன் நன்நாளில் அன்பின் கமலநாதன் அவர்கள் மேன்மேலும் கல்விச் செல்வத்தைப் பெற்று சீரும் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல அகிலாண்ட நாயகி பேச்சியம்மனின் பேரருள் கிடைக்க வேண்டுமெனவேண்டுகின்றேன்.

*சிவாகம கிரியா ரத்தினம்*
*சிவஸ்ரீ. சதா. மகேஸ்வரக் குருக்கள்,*
*நாயன்மார்கட்டு.*

*பிரதமகுரு,*
*நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி (பேய்ச்சி),*
*அம்பாள் தேவஸ்தானம்.*

## நவீனகாலத்துப் பகீரதன்

தனது முன்னோர் நற்கதி பெறுதற்காய் அயராது முயன்று சிவபெருமானின் திருமுடி மீதிருந்த கங்கா நதியையே பூமிக்குக் கொண்டு வந்தான் பகீரதன்.

யாழ்ப்பாணத் தேசிய கல்வியியற் கல்லூரியை இங்கு கொண்டு வரவும், அதனை எமது தமிழ் இளைஞர்களின் அரும் பெரும் நிதியமாக உருவாக்கவும் அயராது உழைத்து வரும் "கலாநிதி" திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களையும், நவீன காலத்துப் "பகீரதன்" என்று சொல்வதிலே எவ்விதத் தவறும் இல்லை.

தன்னலம் கருதாது தமது நேரம், திறமை, செல்வாக்கு அனைத்தையும் கல்விக் கல்லூரிக்கே இவர் அர்ப்பணித்துச் செயலாற்றி வருகின்றார் என்பதை நான் நன்கறிவேன். கல்லூரித் தேவைகளை நிறைவேற்றிட அதன் பீடாதிபதியான கமலநாதன் அவர்களுக்கு நாம் எம்மாலான உதவிகளையும் ஊக்குவிப்பையும் வழங்கி வருகின்றோம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு ஒரு வரப்பிரசாதமாய் அமைந்துள்ள தேசிய கல்விக் கல்லூரி மூலமாக; எம் இளைஞர் பலரும் வேலை வாய்ப்பினைப் பெறுவதோடு; அவர்கள் இலங்கை முழுவதும் தமது அறிவு, கல்வி, பயிற்சி, பண்பு, திறமைகளையெல்லாம் ஒளி வெள்ள மாய்ப் பரப்பி எம் எதிர்காலச் சிறார்கள் சான்றோர்களாய்த் திகழ்ந்திட உதவல் வேண்டும். இதற்குக் கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அர்ப்பண உணர்வோடு ஆற்றி வரும் பணிகளைப் போற்றுவோமாக.

அவர் எல்லா நலன்களும் பெற்றிட என் நல்வாழ்த்துக்களை வழங்குவதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

*க. சண்முகநாதன்*
*அரச அதிபர்*

*யாழ் மாவட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

# அர்ப்பண சேவை செய் அறிஞன்

கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாவது பீடாதிபதியாகப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து கல்லூரி ஒரு வருடத்தில் பல நல்ல கல்விச் செயற் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. இதற்கு அவருடைய அர்ப்பண சேவையே காரணமாகும். எனது மாணவனாக இருந்து கல்வி கற்ற காலத்திலேயே அவருக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பதைப் புரிந்து கொண்டேன்.

யாழ்ப்பாணத்தில் மிகப் பிந்தியதாக தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டாலும் அதை வளர்க்க முற்படும். பீடாதிபதி, விரிவுரையாளர், ஊழியர்களுக்கு எமது சமூகம் பேருதவி புரிய வேண்டும். பீடாதிபதி இதற்கான வழிகளைக் கண்டுள்ளார்.

தற்போது அவர் கலாநிதிப் பட்டத்தைக் கல்வியியலில் பெற்று மேலும் தனது வாண்மையை உயர்த்தியுள்ளார். இந்த நல்ல வேளையில் அவரது சேவைகளைப் பாராட்ட நல்லிதயங்கள் கொண்ட முயற்சி வரவேற்கக்கூடியது. இவ்வேளை நானும் அவரைப் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன். அவரது சேவை மேலும் தொடரவேண்டும்; அதற்கு இறை துணை நிற்பதாக.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை,
துணை வேந்தர்.

*யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,*
*யாழ்ப்பாணம்.*

## கலாநிதி தி. கமலநாதன்

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் [பேராதனையில்] என்னிடம் படித்த மாணவர்கள் சிலர் என்னுடன் இன்றும் நெருக்கமான தொடர்புடையவர்களாக யாழ்ப்பாணத்தில் உள்ளனர். அவர்களுள் கலாநிதி தி. கமலநாதனும் ஒருவராவார். அவர் அன்று தொடக்கம் இன்று வரை எங்கள் குடும்பத்தில் ஒருவராகவே இருக்கிறார்.

அவருடைய சிறந்த குணங்களுள் ஒன்று தன்னுடைய ஆசிரியர்களிடத்து அவர் காட்டும் மரியாதை. பேராசிரியர் சு. வித்தியானந்தன் மிகவும் விரும்பிய மாணவர் இவர். கமலநாதனுக்குப் பேராசிரியர் மேல் இருந்த மதிப்பும் அன்பும் சொல்லிலே வடிக்க முடியாதவை. அவர் இருக்கும் போது வெளிக்காட்டிய மதிப்பையும் அன்பையும் விட அவர் காலமாகிய பின்னர் காட்டிய அன்பும் மதிப்பும் மிகவும் உயர்ந்தனவாயமைந்தன. அவருடைய பெயரிலே ஒரு நிறுவனத்தை அமைத்து ஆண்டு தோறும் அவருக்கு விருப்பமான நாட்டுக் கூத்து நிகழ்ச்சிகளையும் நினைவுச் சொற்பொழிவுகளையும் கமலநாதன் நடத்தி வருகிறார்.

ஒரு பொதுக் கலைப் பட்டதாரியாகத் தன் கல்விப் பாதையைத் தொடங்கிய கமலநாதன் கல்வித் துறையிலே சிறப்புத் தகைமைகளாய் பெறத் தொடங்கினார். அவ்வாறு தொடங்கிய அவர் இன்று அத்துறையிலே கலாநிதி ஆகியுள்ளார். இவற்றுக்கு மேலாக இன்று யாழ்ப்பாணத் தேசியக் கல்விக் கல்லூரியின் தலைவராகப் பணி செய்கின்றார். கல்வித்துறையிலே உயர்பட்டம் பெற்ற ஒருவரை இந்நிறுவனத்துக்குத் தலைவராக நியமித்தது மிகப் பொருத்தமான செயற்பாடாகும்.

கலாநிதி கமலநாதன் தன்னுடைய பணிகளை ஆர்ப்பாட்டமில் லாமல் அமைதியாகச் செய்து வருபவர். பல இக்கட்டான சூழ்

நிலைகள் ஏற்பட்ட போதிலும் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு அவற்றினின்று அமைதியாக மீள்பவர்.

பண்டாரவளை அர்ச் யோசப் கல்லூரியிலே அவர் பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் நாங்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்தோம். ஆண்டுதோறும் கமலநாதனுடைய அழைப்பின் பேரில் அவருடைய கல்லூரித் தமிழ் விழா நிகழ்ச்சிகளிலே பங்கு பற்றுவோம். அக்கால நினைவுகள் இன்னும் பசுமையாகவுள்ளன. என்றுமே கீழ்ப் படிவுள்ள மாணவனாக மட்டுமன்றி, எங்கள் குடும்பத்திலே மிகுந்த அன்புடையவராகவும் இருந்து வருகிறார். இதனாலேதான் என்னுடைய அறுபதாண்டு அகவை நிறைவை ஒரு பெரிய கோலாகல விழாவாகக் கொண்டாடக் காலாயிருந்தார்.

கலாநிதி கமலநாதனின் கல்வி மேம்பாட்டைப் பாராட்டி வாழ்த்தும் இவ்வேளையிலே நானும் எனது குடும்பத்தினரும் அவருக்கு எங்கள் பாராட்டுதல்களைத் தெரிவிப்பதுடன், அவர் எல்லாச் சிறப்புகளையும் பெற்று இன்று போல் என்றும் வாழ இறையருளை வேண்டுகிறோம்.

*பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்,*
*முதுநிலைத் தமிழ்ப் பேராசிரியர்.*

*பீடாதிபதி, உயர்பட்ட ஆய்வு பீடம்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*


## சவால்களை எதிர்கொண்டு சாதிப்பவர்

கலாநிதி தி. கமலநாதன் அவர்கள் சமகால யாழ்ப்பாணத்துக் கல்விச் செயற்பாடுகளின் சவால்களை எதிர்கொண்டு வருபவர். தனது விடா முயற்சியினால் தன்னையும் உருவாக்கி, தாம் வாழும் கல்விச் சூழலின் உருவாக்கத்திலும் பங்கெடுத்து வருபவர். கல்வியுலகின் சமகால முரண்பாடுகள் கருத்தியல் வழியாகவும், தரநிலை வழியாகவும், கட்டமைப்பு வழியாகவும் கிளர்ந் தெழுகின்றன. அவற்றை உள்வாங்கியும் புறநிலைப் படுத்தியும் தம்மாலியன்ற பங்களிப்புக்களைச் செய்து வருபவர் கலாநிதி தி. கமலநாதன் அவர்கள்.

நெருக்கடியான காலகட்டத்தில் நடப்பியல் தழுவிய தலைமைத்துவத்தை உருவாக்கியும், வளர்ந்தும், பயன் நுகர் வகையில் விரிவுபடுத்தியும், மாணவர்களையும், நண்பர்களையும் நல்லாற்றுப்படுத்தி வருபவர் அவரது பணிகள் கல்வியுலகின் மறு மலர்ச்சிக்கு மேலும் வளஞ்செய்ய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

*கலாநிதி சபா. ஜெயராசா,*
*சிரேஸ்ட விரிவுரையாளர்,*
**கல்விப்பீடம்**

*தலைவர்,*
*நுண்கலைப்பீடம்,*
*யாழ் பல்கலைக் கழகம்.*



## மண்ணை நேசிக்கும் மாமனிதன்

செந்தமிழும் சிவநெறியும் செழித்தொளிரும் நாயன்மார்கட்டில் சைவவேளாண் குடியில் புகழ்பூத்த திருநாவுக்கரசு அமிர்தவல்லி தம்பதிகளின் மகனாகப் பிறந்தவர் தான் திரு. கமலநாதன் அவர்கள். பல்வேறு இடர்களுக்கும் மத்தியில் "கல்வியே கருந்தனம்" என்று மிகுந்த ஈடுபாட்டுடன் கற்றவர். தான் கற்ற கல்வி பிறருக்குப் பயன்படும் வகையில் பிரயோகப் படுத்துவதில் அன்றும் இன்றும் உழைத்து வருபவர். பதவிகள் வந்தணைந்த போதெல்லாம் அவை சமுதாயத்திற்கு எதாவது நல்லதைச் செய்வதற்குத் தமக்கு வழங்கப் பட்டதாகவே கருதிச் செயற்பட்டவர். எந்த வேலையில் ஈடுபட்டாலும் அதில் முழு ஈடுபாட்டோடும் அர்ப்பணிப்பு உணர்வோடும் அதைச் செய்பவர். கடுமையாக உழைப்பவர். தனது வாழ்நாளில் எவ்வளவு கஸ்டம்பட்டேனும் தான்பிறந்த மண்ணுக்கும் தான் வாழும் சமூகத் திற்கும் ஏதாவது நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணம் உடையவர். எமது நாயன்மார்கட்டு மண்ணோடும், மக்களின் கல்வி, சமயம், விளையாட்டு, அறிவூட்டல், நூலகம், அபிவிருத்தி, சமூக சேவைப் பணிகள் என்று பல்வேறு கோணங்களில் நின்றும் உதவி வருபவர். அன்னை பேய்ச்சி மேலும், அப்பன் முருகன் மேலும் ஆழ்ந்த பக்தி மிக்கவர். நல்லதையே எண்ணுவார், செய்வதையே சொல்லுபவர்.

இம்மண்ணை நேசித்த மாமனிதன் யாழ் தேசியக் கல்வியியற் கல்லூரியின் ஸ்தாபகராயும் முதற் பீடாதிபதியும் ஆகியதையிட்டு நாம் பெரு மகிழ்வு எய்துகின்றோம். இவற்றிற்கு மகுடமிட்டாற் போல் திரு. கமலநாதன் அவர்கள் கல்வியியற் "கலாநிதி" ஆனதையிட்டும் பெருமை கொள்வதோடு அன்னை பேய்ச்சி அருளால் இவர் எல்லா நலமும், வளமும் பெற்று மேன் மேலும் உயர்ந்து இனிதே வாழ வாழ்த்துவதிற் பேருவகையடைகின்றோம்.

*யாழ்/நா/இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலய பரிபாலன சபை*
*யாழ்/நா/இராஜராஜேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் தண்ணீர்ப்பந்தல் சபை*

*யாழ்/நா/சைவ அபிவிருத்திக் கழகம்*
*சிவபரன் பாலர் பாடசாலை*
*அரி/ம/வ/கிராம அபிவிருத்திச் சங்கம்*
*யாழ்/நா/சனசமூக நிலையம்*
*யாழ்/நா/ச/நி/புலமைப்பரிசில் நிதியம்*
*யாழ்/நா/ம/வி/பழைய மாணவர் சங்கம்*
*யாழ்/நா/ம/வி/பாடசாலை அபிவிருத்திச் சபை*
*ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம்*

## செயல் வீரர் கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களுக்குப் பாராட்டு விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியை ஆரம்பித்து ஒரு வருடப்பூர்த்தியைக் கொண்டாடும் வரலாற்றுச் சிறப்பு மிக்க இத்தருணத்தில் அதன் முதலாவது பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களுக்கு பாராட்டு விழா ஒன்றை நடாத்துதல் பொருத்தமுடையதாகவேயுள்ளது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியைச் செதுக்கிய சிற்பிகளில் அவர் முதன்மையானவர்.


எமது பிரதேச கல்வியின் நோக்கு சமூகத்தின் கூட்டு மொத்தமான பண்பாட்டினை அடுத்து வரும் சந்ததியினருக்குக் கையிளிப்பதும் மாற்றமுறும் தேவைகளுக்கேற்ப தமது பிள்ளைகளின் வாழ்க்கைக்கு வழி காட்டுவதுமாகும். இதற்கு சரியான வழிகாட்டல்களை வளர்க்க வேண்டும் என்ற பேரவாவுடன் இயங்கி வரும் கமலநாதன் அவர்கள் தனது வாழ்க்கை அனுபவங்களினூடாக வளர்ந்தவர். கல்வியியலைத் தன் வாழ்க்கை அனுபவங்களுடன் இணைத்து வாண்மையை உயர்த்தியவர். ஒரு கல்வியியலாளருக்கு இருக்கவேண்டிய சமூகப் பொறுப்பும் நோக்கும் தமிழ்ப்பற்றும் உடையவர். இவ்வியல்பு இன்று எல்லோருக்கும் அவசியமானது.

அவர் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி மாணவனாக இருந்த போதும், யாழ் இந்துக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவனாக இருந்த பொழுதிலும் எல்லோருடனும் அன்பாகப் பழகுதல், சுயகட்டுப்பாடு, ஆளுமை விருத்திப் பண்புகள் உடையவராக திகழ்ந்தார். கடமையுணர்வு, கண்டிப்பு, ஒழுக்கமுடைமை, நீதி, அர்ப்பண சேவை என்ற இயல்புகளுடன் இவரது சாவல்களை

வெற்றி கொள்ளும் திறனுக்கு ஒரு களமாகவே யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி பதவி அவரை அலங்கரிக்கின்றது. இவ்வேளை தன்னுடைய இடையறாத கற்றல் ஊக்கத்தால் கல்வியியலில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவ்வாறான ஒருவருக்குப் பாராட்டு விழா வைப்பது மிகப் பொருத்தமானது. இவ்விழாவை ஒழுங்கமைக்க உதவிய அனைவருக்கும் இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

*வைத்திய கலாநிதி*
*லயன் வை. தியாயகராஜா*

*தலைவர்,*
*கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்,*
*பாராட்டு விழா அமைப்பு*



## ஒழுங்கும் கடமையுணர்வும் கொண்ட பெருமனிதர்

நாயன்மார்கட்டு நல்லூர் என்ற அழகிய கிராமத்திலே 1946.09.20ல் பிறந்து அக்கிராம மகேஸ்வரி வித்தியாலயத்திலே ஆரம்பக்கல்வி கற்று, நல்ல குடும்பச்சூழலில் வளர்ந்தவர் கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள். தொடர்ந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்று இலங்கைப் பல்கலைக்கழகம் புகுந்தார். தன் ஒழுங்கான கற்றலால், கடமையுணர்வால், ஒழுக்க விழுமியச் செயற்பாடுகளால் பெரு வளர்ச்சியடைந்து இன்று எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாவது பீடாதிபதியாகி எம்மையெல்லாம் வழிநடாத்தி வருகின்றார்.

அவருடைய ஒழுக்க ரீதியான நடத்தைகளும், வழிகாட்டல்களும் இன்றைய எமது சமூகத்திற்கு மிக அவசிய தேவைகளாகவுள்ளன. ஒரு நல்ல வழியை நோக்கி கல்வியியற் கல்லூரியை உருவாக்கி வரும் பெரு மனிதராக அவர் விளங்குகின்றார்.

முக்கியமாக இங்கு பயிலும் ஆசிரிய மாணவர்கள் எமது தமிழ்ப்பிரதேசம் எங்கும் நல் சேவையாற்ற சிறந்த பயிற்சியை ஒழுங்கமைத்து இரவு பகலாக உழைக்கின்றார். தனித்து ஒரு திறனை மட்டும் வளர்க்காமல் பன்முகப்பட்ட உன்னதங்களை வளர்ப்பதற்குக் கல்லூரியைக் களமாக்கியுள்ளார். அவரது சவால்களை வெற்றி கொள்ளும் திறன், தியாக மனப்பாங்கு அர்ப்பணிப்பு, நேர்மை, நன்றியறிதல் குணங்கள் எமது மண்ணுக்கும் பெருமை சேர்க்கின்றன.


படித்தவர்களும் புத்தி ஜீவிகளும் எம்மண்ணை விட்டு வசதி வாய்ப்புக்கள் கருதி ஓடிக் கொண்டிருக்கும் போது எமது பீடாதிபதி அவர்கள் தூர நோக்குடன் பல்வேறு தியாகங்கள் செய்து

எம் பிரதேச கல்வி அபிவிருத்திக்காகத் தம்மையே அர்ப்பணித்துச் சேவையாற்று கின்றார். அவரது சேவைக்கு எமது சமூகம் என்றும் நன்றியறி தல்களைத் தெரிவிக்கும். அவ்வகையில் இவருக்கு பாரட்டு விழா வைப்பது எமது மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் செயற்பாடாகும்.

இவ்வேளை கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள் சிறப்பான நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நன்றி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்
கல்லூரிச் சமூகம்.
யாழ்ப்பாணம்.



கமலுந்தன் தலைமையிலே தழைத்தோங்கி வாழியவே

நங்கணெனப் போற்றி செயும்
நாவலரின் நாட தனில்
துங்கக் கரிமு கத்துத்
தூமணியின் கருணை யினால்
எங்களது யாழ்கல்வி யியற்கல்லூரி
ஏற்றமதை இளைஞர்க்கு என்றும் நல்கி
தங்கமகன் கமலினது தலைமையின் கீழ்
தழைத்தோங்கி வாழியவே தாரிணியில்.

கமலக் கண்ண னும்நற்
கருணையினைப் பொழிந் திடவே
விமலன் தன்அருள் தன்னை
விநயமொடு வேண்டு கின்றேன்
நிமலன் இன்னருள தனால்
நித்தியமும் ..கலாநி தி..யாய்
கமல நாத வுந்தன்
கலைவளர வாழ்த்து கின்றேன்.

வீசுபுகழ் கொண்டொ ளிகால்
விசுவமடு நற்ப தியில்
தேசுமிகக் கொண்ட வெங்கள்
தீந்தமிழன் ஆட்சியில் வாழ்
பூசுவெண் ணீற்றி னொடு
பொலிந்து லவுரகு நாதன்
ஆசுகவி படைத்து செயும்
அறம்வளர வாழ்த்து கின்றேன்

தொட்டியடி,
விசுவமடு.

திருவருட்செல்வர்
கா. இரகுநாதன்.

# நினைப்பதைச் சொல்லி, சொல்வதைச் செயற்படுத்தும் சாதனையாளர் கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்

பால்மணம் மாறாத பாலகராய் விளங்கிய காலத்திலிருந்து அரை நூற்றாண்டு கடந்த நிலையிலே பக்குவமும் முதிர்ச்சியும் மிக்க கல்வியாளராய் இன்று காணும் ஒருவர் பற்றிய நினைவுகளை மீட்டுப் பார்ப்பதென்பது, இரண்டு இரண்டரை மணித்தியாலத் திரைப் படத்திற்கு எளிதாகலாம். ஆனால் அவற்றையெல்லாம் சிறியதொரு கட்டுரை வடிவிலே வடித்து விடுவது, எளிதான செயல் அன்று.

யாழ்ப்பாணத் தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதியான, கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களோடு எனக்குள்ள நீண்ட தொடர்பின் அடிப்படையிலே அவரின் வாழ்வையும் சாதனை களையும் கட்டுரைக்க முற்படுகையில் அதிலுள்ள சிரமம் என்னைத் தயங்க வைக்கின்றது என்பதை முதலிலேயே கூறி விடுகின்றேன்.

இந்தத் தயக்கத்திற்கு, எதனைக் கூறுவது எதனைத் தவிர்ப்பது என்ற சலனம் காரணம் அல்ல. ஏனெனில் கமலநாதனின் வாழ்க்கையிலே ஒளிவு மறைவுக்கு இடம் இல்லை. ஆரம்ப காலத்திலிருந்து ‘உள்ளும் புறமும் ஒரு தன்மைக் காட்சியராகவே’ அவர் விளங்கி வருகின்றார்.

இவ்விடத்தில், சிறு வயதிலே நான் படித்த ஓர் ஆங்கிலக் கதைதான் என் நினைவில் ஓடி வருகின்றது. ஒவ்வொரு நாளும் பல தடவைகள் புதிய புதிய உடைகளை அணிவதால் நாட்டையே ஓட்டாண்டியாக்கி வந்த அரசன் ஒருவனுக்குப் புத்திசாலிகள் நால்வர் பாடம் படிப்பிக்க எண்ணினர்; அவனுக்கு, அவன் எக்காலத்தும் அணியாத புதுமையான ஆடை ஒன்றை உருவாக்கித் தருவதாய் வாக்குறுதி அளித்தனர்; இதற்காக அவனிடம் பெரும்பொருள் பெற்று, அவன் அவ்வாடையைப் பார்க்க ஆவலோடு வரும்போதெல்லாம் ஆடை தயாரிப்பதாய்ப் பாவனை செய்து வந்தனர். உண்மையில் அவர்கள் எந்த உடையும் தயாரிக்கவில்லை. “மடையர் கண்களுக்கு நாம் தயாரிக்கும் உடை புலப்படாது” என்று அவர்களின் கூற்றை, அந்த மூட அரசன் நம்புமாறு செய்ததே அவர்களின் சாதனை!

“மாட்சிமை பொருந்திய மன்னரே, ஆடை தயாரகிவிட்டது. இன்று நீங்கள் அதனை அணிந்து கொண்டு மந்திரி, பிரதானிகள் சூழ்ந்து வர வீதிவலம் வரல்வேண்டும்” என்றதும் மன்னனுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. உடை அணிந்து ஊர்வலம் வர அவன் தயாரானான். புத்திசாலிகள் அவனுடைய ஆடைகளையெல்லாம் களைந்து விட்டுப் புதிய ஆடை அணிவது போலப் பாவனை செய்து முழுநிர்வாணியாக்கிவிட்டனர்! அந்த வேளையில் அவன் தன் நிர்வாணத்தை உணர்ந்தாலும் வெளியிற் சொல்ல முடியவில்லை. சொன்னால் மடையனாகி விடுவானே!

பல்லக்கேறிப் பவனிவந்த முட்டாள் மன்னனைச் சூழ்ந்து வந்த மந்திரி, பிரதானிகளும் அவனுடைய கோலம் பற்றி வாய்திறக்கவில்லை. காரணம் எவரும் மடையர் என்று பெயர் பெற விரும்பாமையே!

ஆனால்:–

நிலாமுற்றம் ஒன்றில் நின்று மன்னனின் ஊர்வலக் காட்சியைக் கண்ட குழந்தை ஒன்றுக்கு, வாயைமூடிக் கொண்டு தன்னை அறிவாளியாகக் காட்ட மனம் இல்லைப் போலும், “ஐயோ, இராசா அம்மணமாய் இருக்கிறார்” என்று கத்தியது. பின் நடந்தவை பற்றிச் சொல்ல வேண்டுவதில்லை.

இந்தக் கதையை நீட்டி முழக்கிச் சொன்னதன் காரணம் ‘கண்ணுக்குப் புலனாகா உடை’ [Invisible clothe] என்ற இக்கதையில் வரும் குழந்தை போன்றவரே கமலநாதன் என்பதைப் புலப்படுத்தவே. அவர் நினைப்பதைச் சொல்வார்; சொல்வதைச் செயற்படுத்துவார். அச்செயற்பாடுகளிலே ஏற்படும் வேதனைகள் சோதனைகள் அவருக்குப் பொருட்டல்ல.

எனவே திறந்த புத்தகமாக உள்ள கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களின் வரலாற்று குடத்து நீரைச் சிறிய குப்பியினுள் அடைத்துக் காட்டுவதாய் வரும் என்ற தயக்கமே எனக்கு உள்ளது. எனினும் ‘முயற்சி திருவினை ஆக்கும்’ என்ற வள்ளுவத்தில் நம்பிக்கை வைத்து எழுத முற்படுகின்றேன். முருகன் காக்க.

பிறந்த மண்ணும் பெற்றோரும்

சைவத் திருத்தொண்டர் அறுபத்து மூவர் வரலாற்றினை அருளிச் செய்தவர் சேக்கிழார். தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிது என்பதே பெரியோர் முடிவு. ஆனால் அந்த அடியவர்களின் ஜன்ம நட்சத்திரத்தன்று அவர்களை நினைவு கூர்ந்து குருபூசை நடத்துவது பெரும் புண்ணியச் செயலாகும் இதனை உணர்ந்து குருபூசை மடம் அமைத்துப் பூசைகள் நிகழ்த்தி நாயன்மாரைத் தமது பத்திகொண்டு கட்டியதால் எமது ஊர், 'நாயன்மார் கட்டு' என்ற பெயரைப் பெற்றது.

யாழ்ப்பாணத்தைத் தமிழரசர் ஆண்ட காலத்தில் அவர்களின் தலை நகரான நல்லூரை அடுத்த நாயன்மார்கட்டு பல வகைகளிலும் சிறந்து விளங்கியது. வெயிலுகந்த பிள்ளையார் கோயில், அரசடிப் பிள்ளையார் கோயில் [அரசகேசரிப் பிள்ளையார் கோயில் எனவும் வழங்கும்] ஆகியன அந்த அரசர் காலத்திலேயே நிறுவப்பட்ட பழம்பெருங்கோயில்களாய் இன்றும் புகழ்பரப்பி விளங்குகின்றன. நாயன்மார்கட்டாரின் குல தெய்வமாய் இராஜராஜேஸ்வரி பேய்ச்சியம்பாளும் நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு இங்கு எழுந்தருளி அருள் பாலித்து வருகின்றாள்.

இத்தகைய தெய்வீகச் சூழலிலே பண்டுதொட்டு முறிவுநெரிவு வைத்திய பரம்பரை ஒன்றினாலும், சோதிட பரம்பரை ஒன்றினாலும் திசையெலாம் இசைபரப்பி வரும் நாயன்மார்கட்டே கமலநாதனின் பிறப்பிடமாகும். பயிர்வளமும், மக்களின்மனவளமும் ஒருசேர அமைந்து, கிராமத்தின்பொலிவோடு யாழ்ப்பாணநகரத்தின் வசதி வாய்ப்புக்களையும் பெற்றுச் சிறக்கின்ற தமது தாயகத்தின் மீது கமலநாதனுக்குப் பற்றும் பத்தியும் மிகுதியும் இருப்பதில் வியந்திட எதுவும் இல்லை.

இங்குத் தொல்குடி ஒன்றின் தோன்றலான இராமலிங்கம் திருநாவுக்கரசு ஊரின் முக்கிய பிரமுகர்களில் ஒருவராய் விளங்கினார். நாயன்மார்கட்டு மக்களது இல்லங்களிலே இடம் பெற்ற நலந்தீங்குகளி லெல்லாம் கலந்து கொண்டு அவற்றைத் தலைமை தாங்கி, வழிகாட்டி

நடத்தி வந்த இப்பெரியாரின் பணிகளை இன்றும் மக்கள் நன்றியுடன் நினைவு கூரத் தவறுவதில்லை. இவர் அமிர்தவல்லி என்ற செம்மனச் செல்வியைத் திருமணம் புரிந்து இல்லறம் நடத்தியதன் பயனாகத் [1946.09.20] தோன்றிய நன்மகனே கமலநாதன். இவருக்கு மனோநாயகம் என்பார் அன்புடை அண்ணராயும், கமலவேணி என்பவர் அரும்பெறல் தங்கையாகவும் உள்ளனர். மக்களின் உடல்நல வாழ்விற்கு உறுதுணை புரிந் திடும் உளநலம் வாய்ந்த சுகாதாரப் பரிசோதகராய் இருந்து ஓய்வு பெற்றவர் மனோநாயகம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தங்கை கமலவேணி கணவருடன் பிரான்சில் வதிகின்றார்.

<u>கலையினால் திங்கள் என்ன வளர்ந்த கமலநாதனின் ஆரம்பக்கல்வி (1951–1957)</u>

கார்மேக வண்ணராயும் கவின்மிகும் வடிவினராயும் தோன்றி வளர்ந்து உரிய பருவத்தில் வித்தியாரம்பம் செய்யப் பெற்று, நாயன்மார்கட்டின் கல்விக் கோயிலாய் விளங்கிடும் மகேஸ்வரி வித்தியாசாலையிலே கமலநாதன் தமது ஆரம்பக் கல்வியைப் பெற்றார்.

கடமையிலே தவறாமை, கண்டிப்பு, ஆசிரியர்களை நன்கு வழி நடத்தி அவர்களின் கற்பித்தலை மாணவர்க்கு நன்கு பயன்பெற வைத்திடும் ஆற்றல், மாணவரின் நன்னடத்தையில் மிக்க கரிசனை என்பன ஒரு பாடசாலை அதிபருக்கு இன்றியமையாப் பண்புகள் என்று கருதப்பட்ட ஒரு காலகட்டம் அது. அக்காலகட்டத்தின் முன்மாதிரி எனக் கொள்ளப் பட்டவர்களுள் ஒருவர் அமரர் இளையதம்பி. அவரின் வழி காட்டலில் திறம்பட இயங்கிவந்த மகேஸ்வரி வித்தியாசாலையிலே, [இன்று அமரர்களாகி விட்ட] அருளம்பலம் [ஆறுமுகம்], முத்தையா முதலாம் ஆசிரியப் பெருமக்களின் அரவணைப்பில் கமலநாதனின் எதிர்காலக் கல்விக்குப் பலம் வாய்ந்த அடித்தளம் இடப்பட்டது. இவர்களோடு தமது ஊரவர்களாகிய வித்துவான் இ. மகேஸ்வரி, அமரர். வெ. சிவசம்பு, ஆசிரியர் சிவராசா, திரு. நா. நவரட்ணம் ஆகியோரின் கல்வி சார் வழிகாட்டல்களையும் கமலநாதன் நன்றியோடு நினைவு கூர்கின்றார்.

<u>யாழ் இந்துக் கல்லூரியில் இடைநிலை, உயர்தரக்கல்வி (1957–1966)</u>

இலங்கைத் தமிழர் பொதுவாகவும் யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சைவர்கள் சிறப்பாகவும் தமது தலை நிமிர் கலைக் கழகமாகக் கடந்த

ஒரு நூற்றாண்டுக்கு மேல் ஏற்றுப் போற்றி வரும் தலையாய கல்வி நிறுவனம் யாழ் இந்துக் கல்லூரி என்பதை எவரும் மறுக்கார். கமலநாதன் தமது இடைநிலைக் கல்வியையும் பல்கலைக் கழகம் புகுதலுக்கான உயர்நிலைக் கல்வியையும் இங்குப் பெறக்கிடைத்தமை அவரின் பெரும்பேறு என்றே கூறல்வேண்டும்.

எக்காலமும் எவரும் பெருமையோடும் பெருமதிப்போடும் "இவர்கள் எம் கல்விக்கண்களைத் திறந்து விட்ட பேராசான்கள்" என்று போற்றுதற்குரிய ஆசிரியர்களைப் பெற்ற யாழ் இந்துக் கல்லூரி கமலநாதனைக் கல்வி வல்லாராய் மட்டுமன்றி, சுயசிந்தனையாளராயும் கடமை வீரராயும், சாதனையாளராயும் உருப்படுத்திவிடுவதிலும் பெரும்பங்கு வகித்தது.

கமலநாதன் தம்மைக் கற்பித்த சான்றோர்கள் என்று மிகப்பெரிய தொரு ஆசிரியர்ப் பட்டியலைக் குறிப்பிடுவார். அவரின் நன்றி மறவா நல்லுள்ளத்தினைப் புலப்படுத்த அப்பட்டியலைக் கீழே தருகின்றேன்.

<u>அமரர்கள்:-</u> கே.வி. மயில்வாகனம்[K.V.M], கே.எஸ். சுப்பிரமணியம் [K.S.S], ஈ.எஸ். கிருஷ்ணசாமி[E.S.K], பி.எஸ். குமாரசாமி [P.S], க. சுப்பையா, பரமேஸ்வரன், த. சேனாதிராசா, மு. கார்த்திகேசன், க. செல்லத்துரை, ந. சபாரத்தினம், வி.எம். சூசைப்பிள்ளை.

<u>வாழ்ந்துகொண்டிருப்போர்:-</u> திருவாளர்கள். க. சிவராமலிங்கம் பிள்ளை, தி. ஸ்ரீனிவாசன், வ. மகாதேவன்.

<u>பல்கலைக் கழகப் பட்டதாரி ஆகின்றார் (1967-1969)</u>

1967 இல் கமலநாதன் பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்விலே சித்தியடைந்து கலைமாணிப் பட்டம் பெறப் பேராதனைப் பல்கலைக் கழகம் சேர்ந்தார். இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணை வேந்தராய் விளங்கும் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் அமீர்அலி உட்படத் திறமை வாய்ந்த நல்லாசன்கள் பலர் இவரின் உயர்கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டனர் என்பது உண்மையே. எனினும் தமிழுணர்ச்சியும் பற்றும் மிகுதியும் வாய்ந்த இவருடைய உள்ளம் கவர்ந்த பேராசான்களாய் நெஞ்சில் நிறைந்துள்ளவர்கள்

பேராதனைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த்துறை சார்ந்தவர்களே என்பது சிறப்பித்துக் கூறல் வேண்டுவதாகும். அவர்கள் பேராசிரியர்கள் வி. செல்வநாயகம், சு. வித்தியானந்தன், அ. சண்முகதாஸ், ச. தில்லைநாதன் ஆவர். இவர்களுள்ளுள்ளும் இவரின் நினைவிலும் நெஞ்சிலும் நீங்கா இடம் பிடித்தோர் பேராசிரியர்கள் சு. வித்தியானந்தன், அ. சண்முகதாஸ் ஆகியோரே.

பேராசிரியர் சு. வித்தியானந்தனிடம் தமிழ் கற்றதோடு, அவரின் அபிமான மாணக்கருள் ஒருவராய் அவர் தயாரித்தளித்த நாடகங்களிலே பாத்திரம் ஏற்று நடித்த மகிழ்ச்சி நிறைந்த நாள்களையும் நினைவுகூர்ந்து பெருமிதம் அடைவது கமலநாதனின் வழக்கமாய் இருந்து வருகிறது. சு. வியின் தம்பியாரான குணநிதியின் உற்ற நண்பராய் விளங்கி ஆண்டுதோறும் பேராசிரியர் சு.வியின் நினைவைப் பயனுள்ள வகையிலே கொண்டாடுவதையும் இவர் தமது இன்றியமையாக் கடமைகளுள் ஒன்றாகக் கொண்டிருப்பதும் குறிப்பிட்டுக் கூறவேண்டுவதாகும். அண்மையில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்கு மணிவிழா எடுத்த போது அவ்விழாக் குழுவின் தலைவராய் கமலநாதன் விளங்கினார்.

## ஆசிரியர் கமலநாதன்

1969இல் கலைமாணிப் பட்டதாரியான கமலநாதன் கல்முனை சாஹிராக் கல்லூரியிலே ஆசிரியராய் முதல் நியமணம் பெற்று அங்கு ஓராண்டு [1971–72] பணிபுரிந்தார். அவரின் கற்பித்தற் பணிகள் பின்வரும் கல்லூரிகளிலே தொடர்ந்தன. [இக்காலப் பகுதியினுள் 1979–80 வரை கொழும்புப் பல்கலைக் கழகத்திலே கல்வி டிப்புளோமாப் பயிற்சி பெற்றதும் அடங்கும்.]

2. பண்/பண்டாரவளை புனிதசூசையப்பர் கல்லூரி 1972–1979
3. யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 1980–1990

## காதல் இருவர் கருத்தொருமித்தனர்

கல்வித் துறையிலே கடமை வீரராய் ஒளிவிட்ட கமலநாதன் காதற்சோலையிலும் உலாவரத் தவறவில்லை. பண்டாரவளையிலே

ஆசிரியராய் இருந்த காலத்திலே அங்கு ஆசிரியையாய்ப் பணிபுரிந்த செல்வி இராசாம்பிகை விரைவில் திருமதி கமலநாதன் ஆகி இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தி 1979இல் தம்பதி ஆயினர். இந்த அன்புத் தம்பதியருக்கு இரு கண்மணிகளாய்ச் செழியன் [அவுஸ்திரேலியா], துளசி [கொழும்பு] ஆகியோர் உள்ளனர்.

## ஆசிரியர்க்கு ஆசிரியர்

மாணவரைக் கற்பித்து மாட்சிசார் நன்மக்களாய் ஆக்குவதோடு மனநிறைவு காணாத கமலநாதன், கற்பிக்கும் ஆசிரியர்க்கான கற்பித்தல் முறைமைகளையும் ஆசிரிய வாண்மையையும் வளர்த் தெடுக்க விழைந்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலே விரிவுரை யாளராய் இணைந்து கொண்டமை அவரின் வாழ்க்கையிலே திருப்பு முனை என்றே கூறல்வேண்டும். இத்திருப்பு முனைக்கு அடி கோலியவர் அந்நாட் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் ஆவர். 1990 தொடக்கம் 1995 வரை இப்பணி நிகழ்ந்தது. அதுவே நிலையாகி மட்டக்களப்பு ஆசிரியக் கலாசாலையிலும் தொடர்ந்தது [1995–1996]. இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணம் தேசிய கல்வி நிலையம், மகரகம தேசிய கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆகியவற்றிலும் பணிபுரிந்தமை சிறப்பித்துக் கூற வேண்டுவதாகும்.

## கல்வியியல் முதுமாணி ஆகின்றார்

*யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்*
*சாந்துணையும் கல்லாத வாறு*

என்ற வள்ளுவன் வாய்மொழியின் உண்மையயை உணர்ந்து வாழ்விலே செறியச் செய்து கொண்டவர் கமலநாதன். தமது தொழில்சார் வாண்மையை மேலும் வளர்த்தற்பொருட்டு அவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே பேராசிரியர் ப. சந்திரசேகரம், பேராசிரியர் வ. ஆறுமுகம் ஆகியோரின் வழிகாட்டலிலும் கலாநிதி சபா. ஜெயராசா அவர்களின் உறுதுணையிலும் கல்வியியல் முதுமாணியானார் [M.A. in Education] [1982–1986]

## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதி

இலங்கையின் கல்வியல் வரலாற்றிலே, தேசிய கல்வியற்

கல்லூரிகளின் தோற்றமானது புதியதொரு சகாப்தத்தின் விடிவெள்ளி என்பதை எவரும் மறுக்கார். ஆசிரிய வாண்மையை முழுமையாக்கி இளமையும், துடிப்பும், ஆற்றலும் அமைந்தவர்களும், ஒழுக்கம், கட்டுப்பாடு, ஆசிரியத்துவம் என்பவற்றைப் பேணுபவர்களுமான ஓர் ஆசிரிய சமூகத்தினை உருவாக்குவதிலே இத் தேசியக் கல்வியியற் கல்லூரிகள் முனைப்புடன் பணியாற்றத் தொடங்கியுள்ளன.

ஆசிரியத் தொழிலின் புனிதத்துவத்தில் தளராத நம்பிக்கையும், அதில் ஈடுபடும் தமிழ் இளைஞர்களை நன்கு நெறிப்படுத்த வேண்டும் என்ற ஆர்வமும் மிகுதியும் கொண்ட கமலநாதன் வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராய் இணைந்து கொண்டதும் தமது திறமையாலும் கடமை உணர்வினாலும் அதன் உபபீடாதிபதி ஆனதும் வியப்பிற்கு உரியனவல்ல. பீடாதிபதி, சக விரிவுரையாளர், ஆசிரிய மாணவர் ஆகிய அனைவரதும் மதிப்பிற்கும் அன்பிற்கும் அவர் உரித்தானமை அவரது தந்நலமற்ற அர்ப்பண சேவைக்குக் கிடைத்த சன்மானமேயாகும் என்பதில் எவ்வித தவறும் இல்லை.

## <u>யாழ்ப்பாணத்திலே தேசிய கல்வியியற் கல்லூரி நிறுவப் பகீரதப் பிரயத்தனம்</u>

மட்டக்களப்பு, வவுனியா முதலாம் தமிழ்ப் பிரதேசங்களிலெல்லாம் தேசிய கல்வியியற் கல்லூரிகள் நிறுவப்பட்டு இயங்குகையில் இலங்கைத் தமிழர் தம் இதயத்தானமான யாழ்ப்பாணத்திலே அத்தகைய தொரு கல்லூரி நிறுவப்படாமை கல்விமான்களின்நெஞ்சங்களைநீண்ட காலமாய் உறுத்தி வந்தமை உண்மைதான். அவர்கள் கல்வியமைச்சு, ஆசிரிய கல்விக்குப் பொறுப்பான திணைக்களம் என்பவற்றிற்குத் தமது கோரிக்கையை வன்மையாக அடிக்கடி எடுத்துரைத்தமையையும் மறுத்தல் இயலாது. யாழ்ப்பாணத்தின் அசாதாரண நிலைமைகள் நெருக்கடிகள் என்பவற்றைச் சாக்கிட்டு இவர்களின் கோரிக்கைகள் பின்தள்ளப்பட்டோ, பின்போடப்பட்டோ வந்தன. கோரிக்கை விடுத்தவர்கள் "நமக்கு ஏன் வம்பு?" என்று காலப்போக்கில் மௌனிகளானதும் துணிந்து மேற்கொண்டு நடவடிக்கைகளில் இறங்காமையும் வரலாற்றுப் பதிவுளாய் விட்டன.

ஆனால் கமலநாதன் வாளா இருக்கவில்லை. தேசியக்கல்வியியற் கல்லூரிகளுக்குப் பொறுப்பாளரான ஆணையாளரை இடைவிடாது நச்சரித்து, யாழ்ப்பாணத்திற்குத் தேசியக் கல்வியியற் கல்லூரியைக் கொண்டு வருவதிலும், அதன் பொறுப்பினை ஏற்றுப் பீடாதிபதி யாவதிலும் அவருக்கு வெற்றி கிடைத்தது.

<u>பீடாதிபதியானார்</u>

யாழ்ப்பாணத்தில் ஒரு தேசியக் கல்வியியற் கல்லூரியை ஆரம்பித்து விடவேண்டும் என்று மிகுந்த ஆர்வத்துடனிருந்த கல்வி யமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. பு. இராமகிருஷ்ணா அவர்களதும், தமிழ்த் தேசிய உணர்வு கொண்ட வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி திரு. எஸ். அழகரத்தினம் அவர்களதும் ஊக்குவிப்பும் இன்றைய புணர்வாழ்வு அமைச்சரும் அன்றைய யாழ் மாவட்டப் பாரளுமன்ற உறுப்பினருமான கௌரவ டக்ளஸ் தேவானந்தா வின் பங்களிப்பும் சேர்ந்து தேசிய கல்விக் கல்லூரிகளின் பிரதம ஆணையாளர் திரு. நிஹால் ஹேரத், மற்றும் கல்வி அமைச்சின் செயலாளரின் முன்னிலையில் பீடாதிபதிக்கான நியமனக் கடிதம் அன்றைய கல்வி அமைச்சர் கௌரவ ரிச்சட்பத்திராணா அவர்களால் கமலநாதனுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வின் மூலம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதற் பீடாதியாகும் பேற்றினைத் திரு. தி. கமலநாதன் பெற்றுக் கொண்டார். நியமனக் கடிதத்தோடும் யாழ் மாவட்டவலயக் கல்விப் பணிப்பாளர்களின் அநுசரணையோடும் விரிவுரையாளர்களையும், பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா மூலம் கல்வி சாரா ஊழியர்களைப் பெற்றுக் கொள்ளுமாறும், ஏனைய ஐந்து தேசியப் கல்வியியற் கல்லூரிகளும் தொடங்கப்படும் தினமான 2000ஆம் ஆண்டு வைகாசி மாதம் 2ஆம் திகதி கல்லூரி ஆரம்பிக்குமாறும் அறிவுறுத்தல் பெற்றுக் கொண்டு அமைச்சு அலுவலகத்தை விட்டு வெளியே வந்த இவருக்குத் தாம்தனி ஒரு மனிதனாக நின்று கல்லூரியை ஆரம்பிக்க முடியுமா? என்ற ஆதங்கம் அவ்வேளையில் எழுந்ததில் வியப்பில்லை எனெனில்.....

கல்லூரி ஆரம்பிக்கத் தற்காலிக இடம் வேண்டும் கற்பித்தல் உபகரணங்கள்வேண்டும், மாணவர் இருக்கை மற்றும் தளபாடங்கள்,

வதிவிடக் கல்வி யூட்டல் என்பதால் சமையல் பாத்திரங்கள் வேண்டும். இவ்வாறு வேண்டும் பொருட்களின் பட்டியல்கள் பல.

<u>கல்லூரி பிறக்கக் கைகொடுத்த உத்தமர்கள்</u>

இக்கல்லூரிக்கு முதலில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பெயர் "யாப்பாபட்டுனதேசிய கல்வியியற் கல்லூரி". இதை "யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி" என்று அழகு தமிழில் மாற்றுவிக்கப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். தவராசா உதவினார்.

தனிமரத்தைத் தோப்பாக்க முடியுமா? என்று சிந்தித்த வேளை இது போன்ற பல சவால்களை எதிர் கொண்டு வெற்றி கண்ட மேலதிகச் செயலர் திரு. தில்லைநடராஜா அவர்கள் "யாழ்இந்துவில் பயின்று, பயிற்றுவித்த உமக்கு இது ஒரு பொருட்டல்ல துணிந்து நின்று இச் சவாலை வெற்றி கொள்ளும்" என்று கொடுத்த ஊக்கம்,

இலங்கையில் உள்ள கல்வியியற் கல்லூரிகளின் பீடாதிபதிகளில் சிரேஷ்ட தரத்திலுள்ள வவுனியா கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி திரு. எஸ். அழகரத்தினம் "தேதியைப் பிந்தவிடாமல் இரண்டாம் தேதியே ஆரம்பியுங்கள்மிகுதியைப் பின்னர்பார்க்கலாம்" என்று கொடுத்த தூண்டல்,

கல்வியமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. பு.இராம கிருஷ்ணா தேவையான நிதி, பொருட்கள், பாடத்திட்டங்கள் போன்றவற்றைப் பெறக் காட்டிய வழிகாட்டல்,

தேவையான நிதியை வ.கி.மா. கல்வி அமைச்சின் கணக்காளர் மூலம் அனுப்பிய கல்வி அமைச்சின் கணக்காளரின் உதவி,

இக்கல்லூரி தற்காலிகமாகச் செயற்பட உகந்த கட்டிடத் தொகுதியைத் தம்மிடர்களைப் பொருட்படுத்தாது கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர், உபஅதிபர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் வழங்கிய தாராண்மை,

விரிவுரையாளர்களைத் தெரிவு செய்வதில் உதவிய பேராசிரியர்

க. சின்னத்தம்பி அவர்களின் ஒத்துழைப்பு,

கல்விசாரா ஊழியர்களைப் பட்டியல் மூலம் வழங்கி உதவியதோடு, பதிவாளர் நியமனத்தில் ஏற்பட்ட சிக்கல்களை நீக்க உதவிய பாராளு மன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஒத்தாசை,

நிதி வந்து சேராமையிலும், இங்கு உதவி செய்வார்கள் என்று எதிர்பார்த்து வந்த எம்மவர்கள் உதவி செய்யாதது மட்டுமல்ல உதாசீனம் செய்ததால் ஏற்பட்ட மனச்சோர்வைப் போக்கி, "அஞ்சவேண்டாம் நாமிருக்கின்றோம்" என்று தோள்கொடுத்துதவிய சமூக சேவையாளர் வைத்திய கலாநிதி வி. தியாகராசாவும் அவர் வழி நடக்கும் அன்பர்களும் கொடுத்த பேரூக்கம், பேருதவி,

ஆண்கள் மலசல கூடம் அமைக்கப் பணந்தந்துதவிய கல்வி அமைச்சின் பாடசாலை வேலைப் பகுதிப் பணிப்பாளர் திரு. குருகே அளித்த நிதி உதவி,

இவ்வாறாக முன்வந்து ஒத்துழைத்த நல்ல உள்ளங்கள் தந்த உற்சாகத்தாலும் பல்வேறு இடரிலும் தளர்வுறாது உறுதியான மனத்தோடு வெற்றி காணவேண்டும் என்ற வெறியில் மிகக் கடுமையாக உழைத்த தாலும் அப்போது கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் களாக இருந்த திருவாளர்கள் எஸ். சண்முகராசா, கே. கணபதிப்பிள்ளை, பா. தனபாலன், எஸ். செந்தில்மணி, ஐ. புவனேந்திரன் ஆகியோரது ஏற்பாட்டில்;

மங்கல இசை முழங்க, யாழ்தேசியக் கல்வியியற் கல்லூரி அமைய வேண்டும் என்ற கரிசனையுடை ஓய்வு பெற்ற அதிபர் திரு. கே. ஆர். குமாரசாமி பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்ய, குறித்த 02.05.2000ஆம் ஆண்டு அன்று குறித்த சுபநேரத்தில் "தான் ஏற்றும் இந்தக் கொடி மேலே ஏறுவது போல் கல்வியியற் கல்லூரியும் தனது பணியில் ஓங்கி உயர்ந்து வளர அருள் செய் இறைவா" என்று பிரார்த் தனையோடு கல்லூரிக் கொடியை ஏற்றி வைத்ததின் மூலம் "யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி" என்ற குழந்தையைப்

பிரசவித்து கல்வி உலகுக்கு ஒரு புது அத்தியாயத்தை தி. கமலநாதன் தொடக்கி வைத்தார்.

<u>தளிர் நடை கண்டு மகிழ்நதவர்</u>

விடுதியிலேயே தங்கி, மாணவர்களுக்கு வழிகாட்டி, ஓர் இலட்சிய பூர்வ ஆசிரிய பரம்பரையை உருவாக்குவோம் என்ற சத்தியவாக்கின் அடிப்படையில் தெரிவான விரிவுரையாளர்கள் பலர் காலப் போக்கில் இலட்சியத்தை மறந்து கல்லூரியை விட்டுப் போனாலும், இன்று எம் சமூகத் திற்குத் தேவைப்படும் அயராத உழைப்பு, அர்ப்பணிப்புணர்வு, தியாகம், ஈடுபாட்டோடு செயற்படுதல் ஆகியவற்றோடு செயற்படும், கல்வியின் பெறுமானம் உணர்ந்த திரு. பா. தனபாலன், செல்வி. S. சுகந்தினி, K. கிரிஜா ஊரடங்கு நேரத்திலும் ஊடறுத்து வந்து விரிவுரைகளைத் தவறாது ஆற்றிய திருமதி. ஞா. கணேசநாதன், திருமதி. வி. நரேந்திரா போன்ற பல விரிவுரையாளர்களது தந்நிகரில் சேவையாலும் கல்விசாரா ஊழியர்கள் பலரது கடுமுழைப்பாலும் திரு. கமலநாதன் அவர்களது வேகமான சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும் ஈடுகொடுத்து உத்வேகத்துடன் உழைப்பவர்களது அதரவாலும் கல்லூரிக் குழந்தை தவழ்ந்து நிமிர்ந்து தளிர்நடை பயிலக் கண்டவர்.

பல இக்கட்டான சூழ்நிலைகளுக்கிடையிலும் நூலக வாரம் ஒன்றை ஆரம்பித்துப் பல அரிய நூல்கள் கல்லூரி நூலகத்திற்குக் கிடைக்கச் செய்தவர் கமலநாதன் என்பதும் நினைவுகூரத்தக்கதாகும். சுற்று நிருபம் முறையாக அனுப்பப்பட்டிருந்தும் பல மாதங்களாகத் திணைக்களம் சம்பளம் வழங்காதிருந்த போதும் அரச அதிபரின் உதவி பெற்று விரிவுரையாளர்களின் சம்பளங்களை வழங்கி உதவியமையும் கமலநாதனின் சாதனைதான். பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் அ. துரைராஜா, பேராசிரியர் ப. சந்திசேகரம் என்ற இறவா மூவர் பெயரில்இல்லங்களை ஏற்படுத்தியதும் சிறப்பித்துக் கூற வேண்டியதே இவ்வாறு பல கஷ்டங்கள் மத்தியிலும், குழந்தையை வளர்த்து எழுச்சி கண்டு வரும் கல்லூரியின் உயர்வைக் கண்டு இன்று கல்விச் சமூகமே பெருமிதம் கொள்கின்றது.

## பீடாதிபதி கலாநிதி ஆகிறார்

அல்லும் பகலும் அனவரதமும் அயராது உழைத்து, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியினை ஓரளவு நிலைப்படுத்தி அதன் ஓராண்டு நிறைவினையும் வெற்றிகரமாகக் கொண்டாடிய கமலநாதன் இவற்றி னிடையே தமது கற்றல் ஆய்வுகள் ஆகியவற்றையும் கைந்நெகிழ்க்காது தொடர்ந்தமை உண்மையிலே பாராட்ட வேண்டிய ஒன்றேயாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியற்றுறைச் சிரேட்ட விரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராசாவின் ஆலோசனை, மேற்பார்வை அநுசரணை என்பவற்றோடு, "சமூக விஞ்ஞானங்களின் ஒன்றிணைப்பும், இலங்கையில் சமூகக்கல்வி கலைத் திட்டத்தின் அமைப்பும், 1972ம் ஆண்டிற்கு பின் வெளிவந்த சமூகக்கல்வி தமிழ் மொழி பாடநூல்களில் அவற்றின் பொருத்தப்பாடும்" என்ற பொருளிலே ஆய்வு மேற்கொண்டு கலாநிதிப் பட்டமும் அவருக்குக் கிடைத்தது. இவ்வகையில் கலாநிதி சபா. ஜெயராசாவின் உற்றுழி உதவிய பெரும்தன்மை கமலநாதனின் உள்ளத்தில் நிலையானபேரிடத்தை வகிப்பதில் வியப்பில்லை. தமது கல்வி யியற்றுறை வளர்ச்சிக்கும், ஆய்வுக்கும் தூண்டுகோல்களாய் ஏற்கெனவே அமைந்து வழிகாட்டிய பேராசிரியர்கள் சோ. சந்திரசேகரம், க. சின்னத்தம்பி ஆகியோரையும் கமலநாதன் நன்றியுடன் நினைவு கூர்கின்றார்.

## சமய சமூகப் பணிகளும் வழிகாட்டிகளும்

இளமைக் காலம் முதல் தாம் பிறந்த மண்ணையும் மக்களையும் மனப்பூர்வமாக நேசித்து வருபவர் கமலநாதன் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். நாயன்மார்கட்டில் நடைபெறும் எந்த நிகழ்விலும் கணிசமான பங்கு அவருடையதாகவே இருக்கும் என்பதை மறுத்தற்கில்லை. சமூகத்தின் தேவைகளை உணர்ந்து அவற்றைநிறைவேற்ற மூத்தோ ரையும் இளைஞரையும் தூண்டிப் பக்கத் துணையாய் நின்று செயலாற் றுவார். நாயன்மார்கட்டு சன சமூக நிலையம் அவரின் சேவையைக் கணிசமான அளவு பெற்றுள்ளது. அசம்பாவிதங்கள் நிகழ்ந்து ஊரின் அமைதி குலைந்து மக்கள் புலம் பெயர்ந்து செல்வதற்கு முன்பு இச் சனசமூக நிலையத்தில் மாதாந்தக் கருத்தரங்குகள், சிறப்புக் கூட்டங்கள் என்பனநடைபெற அனைத்து ஒத்துழைப்பும் வழங்கியவர் அவர். க.பொ.த. [சா/த] பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் குழாம் ஒன்றுக்கு, இலவச

வகுப்புக்களை ஒழுங்கு செய்து, ஊரவரான ஆசிரியர் சிலரின் அநுசரணையோடு நடத்தியதும் நினைவு கூரவேண்டியதே. 'சொக்கன் மணிவிழா நினைவுக் குழு' அமைத்து, அதற்கனா நிதியினை நிரந்தர வைப்பாக வங்கியில் இட்டு, ஆண்டுதோறும் அதன் வட்டியிலிருந்து, மகேஸ்வரி வித்தியா சாலையில் அவ்வாண்டு புலமைப்பரிசில் பரீட்சையிலும், க.பொ.த. [சா/த] பரீட்சை யிலும் சிறப்புத் தேர்வு பெற்றோர்க்கும் பரிசில் வழங்குவதிலும் கமல நாதனுக்கு முக்கிய பங்கு உண்டு. இக்குழுவின் தலைவரும் இவரே.

சமூக சமய சேவைகளிலே இவரின் இளமை தொட்டு இவருக்கு வழிகாட்டிய நல்லோர் என இவர் நன்றியுடன் பாராட்டுபவர்கள் திருவாளர்கள் கா. இரகுநாதன், வே. பூவிலிங்கம் ஆகியோரும் அமரர் சு. பரநிருபசிங்கமும் [பரமேசுவராக்கல்லூரி முன்னாள் அதிபர்] ஆவர்.

<u>பத்தி வலையிற் படுவோர்</u>

நாயன்மார்கட்டுப் பேய்ச்சியம்பாளை "எங்கள் கிழவி" என்றும், "பேய்ச்சி அத்தை" என்றும் ஆதுரத்துடன் அழைத்து அவருக்கே தம்மை ஆளாக்குவது நாயன்மார்கட்டாரின் வழக்கம். அந்த வழக்கிற்குக் கமல நாதன் விலக்கல்லர். எங்கிருந்தாலும் அம்பாள் திருவிழாக் காலங்களில் ஊர் வந்து ஆலயத் தொண்டுகளிலும் திரிகரண சித்தியோடு ஈடுபடுவது யாவரும் அறிந்ததே.

அடுத்து, நல்லூர் முருகப் பெருமான்மீதும் அவருக்கு அளவு கடந்த பத்தியுண்டு. இவ்விரு ஆலயங்களிலும் வாகனம் காவிக்காவி, அதன் அடையாளமாகக் கழுத்தில் பந்து போன்ற வீக்கத்துடன் அவர் காணப்படுகின்றார்.

<u>பண்பாளர் கமலநாதன்</u>

*நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது*
*அன்றே மறப்பது நன்று*

என்ற திருக்குறட் கருத்தை வார்த்தைக்கு வார்த்தை உறுதி யாகக் கடைப்பிடித்து வருபவர் கமலநாதன் என்றால் அது மிகையுரை அன்று.

தம்மைக் கற்பித்த ஆசிரியர்கள், மூத்தோர், உற்றார் உறவினர்களி
லெல்லாம் மிகுந்த மதிப்புடன் கூடிய உள்ளார்ந்த அன்பினைச் செலுத்து
வதும், நண்பர் குழாத்தை நயந்து கூடி உறவாடுவதும் கமலநாதனின்
நயத்தகு பண்புகளாகும். கண்டிப்பை முகமூடியாய்த் தரித்த கனிவான
நெஞ்சினர் என்று கமலநாதனைச் சொல்வது முற்றிலும் பொருந்துவதே.

இன்று அவர் மேற்கொண்டுள்ள பணி புனிதமானது, மகத்தானது,
தமிழ் இளைஞர்க்குப் பிரகாசமான எதிர்காலத்தை வழங்குவது.

இவற்றை உணர்ந்தவராய்க் கமலநாதன் தம்மைக் கண்டிப்
புள்ளவராய்ப் புறத்தே காட்டி வருகின்றார்.

இத்தாலியை ஒற்றுமை பூணவைக்க அர்ப்பண உணர்வுடன் செயற்
பட்ட மாவீரன் கரிபால்டி, தன் நாட்டு மக்களைப் பின்வருமாறு அறை
கூவி அழைத்தான்.

"என் நாட்டு மக்களே, நான் மேற்கொண்டுள்ள குறிக்கோளினை
நிறைவேற்றிட உங்களை அழைக்கின்றேன் என்னுடன் கூடி வரும்
உங்களுக்கு, பசி, நெடும் பயண இடர்கள், சிலவேளைகளில் சாவு
என்பவற்றையே என்னால் உத்தரவாதம் செய்ய முடியும். நாட்டின் மீது
உண்மையான பத்தி பூண்டவர்கள் என்பின் வாருங்கள்."

கரிபால்டி போலக் கமலநாதனின் அழைப்பிலே சாவுக்கு இடமில்லை
என்பது நிச்சியம். ஆனால் இதய பூர்வமான அர்ப்பண உணர்வுடன் கூடிய
கடினமான உழைப்பு ஒன்றையை அவர் வேண்டி நின்கிறார்.

ஈழத்துத் தமிழ் இளைஞர்களதும் எதிர்கால சந்ததியினரதும் கல்வி
யானது கதிரவன் போன்று ஒளிகான்றிட வேண்டும் என்ற வேணவாவே
அவரின் அழைப்பின் தொனிப்பொருள் யாழ்ப்பாணத் தேசியக்
கல்வியியற் கல்லூரியுடன் தொடர்புடையோர் இதனை உணர்வர்
என்பதிற்கு ஐயம் இல்லை.

வித்துவான் க. சொக்கலிங்கம்
(சொக்கன்)

## எனது கல்வியில் உயர்வு தந்த திருப்பு முனை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நான் க.பொ.த. உயர்தரம் கற்றுக் கொண்டிருந்த காலம். க.பொ.த. சாதாரண தரம் வரை எனது கல்வி எவ்வித தடையுமில்லாமல் சென்றது. நான் கற்ற பாடசாலைகள், தந்தையார் ஏற்படுத்தித் தந்த பின்புலம் தாயாரின் தெய்வ பக்தி அண்ணனின் ஆசீர்வாதம் அங்கு காரணங்களாக இருந்தன.

இக்காரணங்களில் எவ்வித மாற்றமும் இல்லாத போதிலும், குடும்ப நிலை காரணமாக ஏதாவது ஒரு தொழிலைப் பெற்று விட வேண்டும் என்ற எண்ணம் க.பொ.த. உயர்தரத்தில் கல்வியில் அக்கறையின்மையை ஏற்படுத்தி விட்டது உண்மையே. இது எம்மில் பலருக்கு இருந்தது.

"இவன் கமலநாதன் படிக்கக் கூடியவன் படிக்கிறானில்லை" யாழ் இந்து ஆசிரியர் பண்டிதர் செல்லத்துரை கவலைப் பட்டதுண்டு. இந்நிலையில் க.பொ.த. உயர்தரம் முதல் தடவை சித்திக்கவில்லை.

ஏன்! என்ன நடந்தது? என்ன பிரச்சினை? திரு. சொக்கன் வழி மறித்து அன்று என்னிடம் கேட்ட கேள்வியிது. உண்மையைக் கூற முடியுமா! சமாளிக்க வேண்டும்.

"இல்லை Sir, இந்தத் தமிழ் இலக்கணம் பிரச்சினையாக வுள்ளது. கஷ்டமாகவிருக்கிறது. அதுதான் ......."

"தமிழ் இலக்கணம், என்ன கஷ்டம் மாலை வீட்டுக்கு வாரும். எது விளங்கவில்லை. விளங்காததைக் கேளும். கட்டாயம் வாரும்" இது சொக்கன்.

இது என்ன சங்கடம்? எனக்குத் தமிழ் இலக்கணத்தில் ஏதாவது தெரிந்திருந்தால் அல்லவா, தெரியாததைக் கேட்கலாம்?

முன்பே ஒருவர் கூறி விட்டார் "உனக்கு தமிழ் இலக்கணம் சரிவராது. பேசாமல் வேறு வேலையைப் பார்."

திரு. சொக்கன் கூறிய நேரம் அவர் வீட்டுக்குச் சென்றேன். "சரி சொல்லும், இலக்கணத்தில் எப்பகுதி விளங்கவில்லை" என்று கேட்டார். நான் எதைக் கூறுவது? விழித்தேன். தடுமாறினேன். என் தவிப்பு அவருக்குப் புரிந்து விட்டது.

சரி..... பார்போம்..... என்று ஆறுமுக நாவலரின் இலக்கணச் சுருக்கம் நூலுடன் வந்தார். மெதுவாக ஆரம்பித்தார். தினமும் மாலை வருமாறு பணித்தார். கட்டுப்பட்டேன். இலக்கணச் சுருக்கம், நன்னூலாகி, தொல்காப்பியமும் வந்தது. பழைய வினாத்தாள் சில விளக்கப்பட்டன. தமிழ் இலக்கணம் அவ்வளவு கஷ்டமாகத் தெரியவில்லை.

சோதனை வந்தது. சித்தியடைந்தேன். பல்கலைக் கழகம் பட்டப் படிப்புகள் தொடர்ந்தன. கலாநிதியுமானேன். அன்று மட்டும் அந்தத் திருப்பத்தினைச் சொக்கன் அவர்கள் ஏற்படுத்தியிராதிருந்தால் தொழில் ஒன்றைத் தேடியே நான் ஓடியிருந்தால்.......? எல்லாம் எம்பெருமான் முருகன் செயல்.

என்னை நன்றாகக் கற்பித்து உயர்வு காணச் செய்து இன்னும் என் உயர்வில் தாமும் மகிழும் அந்தப் பென்னம்பெரிய உள்ளத்தினர் இன்னும் பல காலம் நோய் நொடியின்றி, எவ்வித குறையுமின்றி வாழ எல்லாம் வல்ல எம்பெருமான் முருகப் பெருமான் அருள் புரிவாராக.

நன்றி மறவா
மாணவன்

# IMPORTANCE OF LIBRARY AND INFORMATION SCIENCE.

*Human achievement both material and spiritual consists essentially in acquiring knowledge, generating resources, preserving, adding nascent information subsequently disseminating same. Social heredity consists in transmission of knowledge from generation to generation. A country's development is measured in terms of technological advancement as it brings a tremendous change in the social life of a nation. Libraries play a vital role in transmitting knowledge to individuals which paves the path towards the development of technology. The word library is derived from Latin which means "a Book".*

*The history of library is closely connected with the history of books. There are evidences for the presence of books and libraries in early days. Books are defined as depository of knowledge. Knowledge is a powerful tool both in life and work. From time immemorial libraries have the practice of preserving records and the role of the librarian was "Keeper of records". As early as the 3rd millennium BC, records of stone inscriptions, clay, tablets, papyrus roles, parchment codex and ola manuscripts were stored in libraries. With the evolution of printing, society underwent a socio economic cultural and technological revolution. The role of the librarian too changed as "Book lender". Until 1900 printed materials were the only information vehicle of choice. With the information explosion, caused by the proliferation of the interdisciplinary subjects in 1940s microforms emerged to reduce space to store printed records. The advent of computers in 1960s brought another major revolution changing the role of librarian as "information Manager".*

*Libraries serve as store houses of knowledge and as centres of dissemination of knowledge or retrieval of such information, expeditiously and systematically. Great libraries have existed as centres of learning to keep the lamp of learning, burning. The libraries had a traditional function in preserving the individualistic cultural traits of the community it served. The Jaffna public library had, at one*

*time, on its shelves very valuable documents and publications that threw lot of lights on the Jaffna man's cultural traditions. Libraries are bound to maintain their archival collections with great care as their cultural inheritance.*

*The university depends on its library to fulfil its mission of educating the undergraduates and research scholars. The university has an obligation to the society as torch bearers of social progress. The knowledge, the university imparts, must have relevance to the great problems of living a purposive life in a changing world. The university library should be attuned to the requirements of the younger generation to enable them to be prepared for the major task of our age.*

*There are special libraries to cater the needs of science and technology. They serve the purpose of a changing world. There are highly specialised libraries in the developed nations.*

*Professionals and men of learning build their own private libraries to enable them to practice their profession with updated knowledge. These libraries serve as windows of the landscape of their lives. An educated society in a society of refined men and women who believe in the process of a continued knowledge accumilation.*

*To the students coming from crowded homes or noisy hostels, the library serve as the refuge for quiet study. The library is of immediate value to these students.*

*Libraries hold an esteemed position in being a primary source for acquiring and disseminating the information required by the society. To maintain this position, libraries should be adaptable to changes based on user demands. When information continues to be generated in an ever increasing quantity, libraraies must develop to accommodate the demands of the omnipresent information explosion. The emergence of electronic information technology has led to tremendous changes in the activities of libraries by opening new vistas for exchange of knowledge on the internet and have enabled information seekers to obtain what they require*

*at a greater speed than ever before. Thus the libraries have become the moot pivotal points in the communities in the process of learning.*

*In the past a librarian didn't enjoy the status the post warranted. The uniqueness of the post was not felt or realised in society. Yet for all, Librarians have produced one of the most remarkable feats of international cooperation in the he last fifty years which has gone unannounced and unaccounted. But their characteristics helped in informing the development of standards for the internet and the world wide webs. Now it is possible to identify any recently published work from any part of the world. The significant skills that the Librarians have brought as a profession in making the printed word universally available has been overlooked. By ensuring that our human networks are active and by effectively handling the inflow of paper based information, we can best serve our readers, earn the professional respect and position ourselves to act as guides at the information revolution. The contributions of the Libraries and Librarians should be effective and substantial to cope up with the rapid changes to satisfy the aspirations of the community that it serves.*

*Interest in Library studies in Jaffna generated once again in our minds quite recently. Regional branch of the Sri Lanka Library Association conducted courses at three stages in Jaffna. But due to various constraints the coordination had been hindered and hampered by the ravages of political climate. The violent years of war have scarred the community to a breaking point, the Library science students in Jaffna were denied the chance of presenting themselves for the Sri Lanka Library Association examinations in Jaffna. In a situation like this we should pool all our energy resources and contributions together to ensure that proper facilities are provided to develop the talents of College of Education students in this field. Let us strive hard to achieve this mission and make the attempts of the task of the President of this college, a great success.*

*Mrs. R. Pararajasingam*
*Librarian, University of Jaffna.*